# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

~~Under Section 154 Cr.P.C.~~ Under Section 173 BNSS
~~குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 154-ன் கீழ்~~

C 8040895

1. District மாவட்டம் : Nilgiris PS: காவல்நிலையம் VEAC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 4 Date: நாள் 12.09.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (A) r/w 12
(ii) Act சட்டம்: Act, 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act, 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 11.09.2024 Date from : நாள் முதல் Prior to Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.15 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.09.2024 Time நேரம் : 10.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் o/o the Cherangode Village Panchayat Pandalur Taluk. Gudalur Block. The Nilgiris.
Beat Number : முறைக் காவல் எண் – (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காவல் நிலைய பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. H. Prakash (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Husiur (g) Address : முகவரி Sarishtadar (General) i/c District Inspection Cell Officer the Nilgiris

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. P. Sajith Panchayat Secretary. Cherangode Village Panchayat the Nilgiris
2. Tr. K.K. Saibu. Temporary Computer Operator. Cherangode Village Panchayat. the Nilgiris
3. Tr C. Gopalakrishnan S/o Chelladurai 6/113 O. Annanagar. Factory nethan, Kolappilly
4) Tr S. Subash. S/o Sugumaran No. 12/718. A7, Cherdipet. Gudalur

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– No delay –

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / கைவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / கைவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12/7/24 | 12.07.24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் A.T. Jai Kumar
Rank: நிலை DSP No. எண் ..........
VE AC, The Nilgiris.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

<u>நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2024/AC/NI, u/s 7 (A) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-</u>

இன்று 12.09.2024-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி அ.தி.ஜெய் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (பொது) பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திரு.H.பிரகாஷ் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2024, u/s 7(A) r/w 12 of PC Act, 1988 as amended by PC (Amendment) Act, 21018 கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம், (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. ஐயா, பொருள்: நீலகிரி மாவட்டம், பந்தலூர் தாலுக்கா, கூடலூர் வட்டாரம், சேரங்கோடு ஊராட்சி அலுவலகத்தில் 11.09.2024-ம் தேதி 16.15 மணிமுதல் 12.09.2024-ம் தேதி 04.00 மணிவரை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நான் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தலைமை பொறுப்பாளர் (பொது) ஆக பணிபுரிந்து வருகிறேன். நீலகிரி மாவட்டம், பந்தலூர் தாலுக்கா, கூடலூர் வட்டாரம், சேரங்கோடு ஊராட்சிக்கு 15-வது நிதிக்குழு மானியத்தில் 79 பணிகளுக்காக ரூ.2,01,00,740/- ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக 12.09.2024-ம் தேதி நடைபெறவுள்ள டெண்டரில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு பணிகளை ஒதுக்கீடு செய்ய 11.09.2024-ம் தேதி ஒப்பந்ததாரர்களிடமிருந்து சேரங்கோடு ஊராட்சி செயலாளர் திரு.P.சஜித்

என்பவர் கையூட்டு கேட்டுப் பெறுவதாக நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றது. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.A2/Pdl/30/2024, நாள்:11.09.2024-ன்படி ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட நான், நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.அ.தி.ஜெய் குமார் மற்றும் காவல் குழுவினருடன் சேரம்பாடியிலிருந்து கோரஞ்சால் செல்லும் சாலையில் அமைந்துள்ள சேரங்கோடு ஊராட்சி அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டேன். அந்த திடீர் தணிக்கையின்போது நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் விவரம் பின்வருமாறு: அந்த திடீர் தணிக்கையானது சேரம்பாடியிலிருந்து கோரஞ்சால் செல்லும் சாலையின் இடதுபுறம் கிழக்கு பார்த்தவாறு தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் அமைந்துள்ள சேரங்கோடு ஊராட்சி அலுவலகத்தில் சுமார் 16.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. அலுவலகத்தின் பிரதான நுழைவாயிலில் நுழைந்தபோது கிழக்கு பார்த்தவாறு இருந்த திருமதி.லில்லி ஏலியாஸ், தலைவர், சேரங்கோடு ஊராட்சி, சேரம்பாடி என்று எழுதப்பட்டிருந்த அறையில் கிழக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவரிடம் காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை அறிமுகம் செய்துகொண்டு, என்னையும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்து, எங்களுடைய உடைமைகளை காண்பித்தும், சேரங்கோடு ஊராட்சி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருக்கும் விவரத்தை தெரிவித்தோம். காவல் துணை கண்காணிப்பாளர் அவரிடம் விசாரிக்க தனது பெயர் திருமதி.லில்லி எலியாஸ் என்றும், தான் 06.01.2020-ம் தேதி முதல் சேரங்கோடு ஊராட்சி மன்ற தலைவியாக இருந்து வருவதாக தெரிவித்தார். அவரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.P.சாதனபிரியா உதவியுடன் தணிக்கை செய்ய தனது ஹேண்ட்பேக்கிலிருந்து பணம் ரூ.1,200/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க வீட்டிலிருந்து செலவுக்கு எடுத்துவந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.1,200/- அவரிடமே திருப்பி

ஒப்படைக்கப்பட்டது. அப்போது ஊராட்சி தலைவரின் அறையில் அவருக்கு எதிரே மூன்று நபர்கள் அமர்ந்திருந்தனர். பின்னர் ஊராட்சி மன்ற தலைவரின் இருக்கைக்கு எதிரே மேற்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த மூன்று நபர்களில் ஒருவரை விசாரிக்க தனது பெயர் திரு.S.சந்திரபோஸ் என்றும், 06.01.2020-ம் தேதி முதல் சேரங்கோடு ஊராட்சி துணை தலைவராக இருப்பதாகவும் தெரிவித்தவரிடம் சோதனை செய்யப்பட்டது. பின்னர் அவருக்கு அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.T.ராஜேந்திரபிரபு என்றும், தான் நான்கு வருடங்களாக சேரங்கோடு ஊராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரராக இருப்பதாக தெரிவித்தார். மேலும், அவர் கையில் வைத்திருந்த டென்டர் நோட்டீஸை காண்பித்து அதில் வரிசை எண்கள் 67 மற்றும் 74-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக EMD மற்றும் பட்டியல் தொகை ரூ.6,250/- செலுத்தியுள்ளதாகவும், அதற்கான இரசீதுகள் எதுவும் ஊராட்சியில் வழங்கவில்லை என தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்த பணத்தை கத்தையா எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூ.20,790/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, தான் தேவாலா ஏரோட்டில் வீட்டு வசதி வாரியம் மூலம் செய்துவரும் கட்டிட வேலைக்காக வேலையாட்களுக்கு கூலி கொடுக்க வைத்திருக்கும் பணம் என்று கூறினார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால், அந்த பணம் ரூ20,790/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்பு அங்கிருந்த மற்றொரு நபரிடம் விசாரிக்க தனது பெயர் திரு.K.தமிழ்செல்வன் என்றும் வீடு சேரங்கோடு ஊராட்சி அலுவலகத்திற்கு எதிரில் உள்ளதாகவும், தான் 3 வருடங்களாக சேரங்கோடு ஊராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக இருந்து வருவதாகவும், கையில் வைத்திருந்த டென்டர் நோட்டீஸை காண்பித்து வரிசை எண்.69-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கான EMD மற்றும் பட்டியல் தொகையாக ரூ.7,400/- செலுத்தியுள்ளதாகவும், அதற்கான இரசீதுகள் எதுவும் ஊராட்சியில் வழங்கவில்லை எனவும் தெரிவித்தார். பின்னர் வராண்டாவில் கிழக்கு பார்த்தவாரு போடப்பட்டிருந்த ஸ்டீல் சேர்களில்

அமர்ந்திருந்த மூன்று நபர்களில் ஒருவரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.A.விஜயசிங்கம் என்றும், தான் சேரங்கோடு ஊராட்சி 14-வது வார்டில் 100 நாள் வேலை திட்டத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தன்னுடைய சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து மடிப்புடன் பணம் ரூ.3,110/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க தான் ஒரு மாற்றுத்திறனாளி என்றும், ஆயுர்வேத மருந்துகள் வாங்கவும், வீட்டு செலவு வாங்க வைத்திருப்பதாக சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால், அந்த பணம் ரூ.3,110/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அங்கிருந்த மற்றொரு நபரிடம் விசாரிக்க தனது பெயர் திரு.M.D.பிரஜிஷ் என்றும், தனக்கு சேரங்கோடு ஊராட்சியில் வார்டு எண்.4 கையுண்ணியில் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் வீடு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், பட்டியலில் தனது பெயர் பிரஜிஷ் என்பதற்கு பதிலாக பிஜிஷ் என்று தவறாக உள்ளதால், அதற்கான ஆதாரத்தை காண்பிக்க வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தனது சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து மடிப்புடன் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூ.5,500/- இருந்தது. அந்த பணம் குறித்து விளக்கம் கேட்க, தான் சுல்தான் பத்தேரியில் எலக்ட்ரானிக் தராசு மெக்கானிக் வேலை செய்து வருவதாகவும், வார்டு மெம்பர் அழைத்ததால் உடனடியாக கிளம்பி வந்ததால், வாடிக்கையாளரிடமிருந்து வாங்கி வைத்திருந்த பணத்தை கொண்டு வந்துவிட்டதாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால், அந்த பணம் ரூ.5,500/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அங்கிருந்த மற்றொருவரை விசாரிக்க தனது பெயர் திரு.R.பத்மநாபன் என்றும், தான் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் வீட்டிற்காக மனு அளித்திருந்ததாகவும், வார்டு மெம்பர் திருமதி.கிரிஜா அழைத்ததால், குடும்ப அட்டை நகல், 100 நாள் வேலை அடையாள அட்டையை எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தன்னுடைய சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.60/-ஐ எடுடு ஆஜர் செய்து பேருந்து செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். அந்த பணம் ரூ.60/- அவரிடமே

திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் சேரங்கோடு ஊராட்சி அலுவலகத்தின் பிரதான நுழைவாயில் அருகே நின்று கொண்டிருந்தவரிடம் விசாரிக்க, தனது பெயர் திரு.C.கோபாலகிருஷ்ணன் என்றும், சேரங்கோடு ஊராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 மளவன் சேரம்பாடியில் வார்டு உறுப்பினராக இருப்பதாகவும், வார்டு சம்மந்தமான பணிகள் தொடர்பாக வந்துள்ளதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தன்னுடைய பேண்டின் இடது பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.9,000/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க சரியான முகாந்திரம் கூறாததால், அந்த பணம் ரூ.9,000/- செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை சோதனை செய்ய தன்னுடைய சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.410/-ஐ எடுத்து ஆஜர் செய்து தனது கை செலவிற்காக எடுத்து வந்துள்ளதாக தெரிவித்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. சேரங்கோடு ஊராட்சி அலுவலகத்தின் வராண்டாவில் நின்றிருந்தவரை விசாரிக்க தனது பெயர் திரு.M.முருகராஜன் என்றும், தான் சேரங்கோடு ஊராட்சியில் உள்ள வார்டு எண்.7 MGNREGS-ல் மேற்பார்வையாளராக இருப்பதாகவும், இன்றைய தினம் 100 நாள் வேலை வருகை பட்டியலை ஒப்படைக்க வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தன்னுடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து மடிப்புடன் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.14,800/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி கேட்க தன்னுடைய சகோதரி மகளின் திருமணம் 08.09.2024-ம் தேதி நடைபெற்றதாகவும், அது திருமணத்தின் மொய் பணம் என்றும், அந்த பணத்திலிருந்து சமையல் செய்தவர்களுக்கும், மேடை அலங்காரம் செய்தவர்களுக்கும் கொடுக்க எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இருந்ததால், அந்த பணம் ரூ.14,800/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஊராட்சி தலைவரின் அறைக்கு வடக்கில் இருந்த அலுவலக அறைக்குள் மேற்கு பார்த்துவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவரிடம் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரிக்க தனது பெயர் செல்வி.R.ஷீலா என்றும், தான் 1996-ம் வருடம் முதல் சேரங்கோடு ஊராட்சியில் தற்காலிக

பணியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் தனக்கு மாத ஊதியமாக ரூ.9,500/- ஊராட்சியில் கொடுப்பதாகவும், தான் அலுவலக பதிவேடுகளை பராமரிப்பதாக கூறினார். பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவர் தனது பர்ஸிலிருந்து பணம் ரூ.120/- ஐ எடுத்து ஆஜர் செய்து தன்னுடைய செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்த பணம் என்று தெரிவித்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அந்த அறையின் வடக்கு பக்க சுவற்றின் அருகே தெற்கு நோக்கு அமர்ந்திருந்தவரிடம் விசாரிக்க தனது பெயர் திரு.K.R.சைபு என்றும் தான் 2006-ம் வருடம் தற்காலிக Computer Operator ஆக பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு ஊராட்சி அலுவலகத்திலிருந்து மாத ஊதியமாக தற்போது ரூ.13,000/- வழங்குவதாக தெரிவித்தார். திரு.சைபு அவர்களிடம் பணி நியமன ஆணை குறித்து காவல் துணை கண்காணிப்பாளர் கேட்க, திரு.சைபு அவர்கள் கணினியில் இருந்து தலைவர், ஊராட்சி மன்றம் சேரம்பாடி அவர்கள் கையொப்பமிடாத கூட்ட நடவடிக்கை நகலை பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்தார். அதில் தலைவர் திருமதி.லில்லி இலியாஸ், ஊராட்சி செயலாளர் திரு.சஜித், Computer Operator திரு.சைபு ஆகியோர்களிடம் கையொப்பம் பெற்று காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் நானும் கையொப்பம் செய்து செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. திரு.சைபு அவர்களின் பணி நியமனம் குறித்து ஊராட்சி தலைவர் திருமதி.லில்லி இலியாஸ் அவர்களிடம் விவரம் கேட்க பணி நியமன ஆணை எதுவும் வழங்கப்படவில்லையென்றும், அவருக்கான ஊதியம் ரூ.13,000/- ஊராட்சி 15-வது நிதிக்குழு மானியம் 10% ஒதுக்கீடு தொகை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) கணக்கிற்கு ஊராட்சியிலிருந்து செலுத்தப்பட்டு, அதிலிருந்து காசோலை மூலம் Computer Operator-க்கு வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார். மேலும் திரு.சைபு அவர்களின் வங்கி கணக்கு விவரங்களை காவல் துணை கண்காணிப்பாளர் கேட்க, கனரா வங்கி, சேரம்பாடி கிளையில் சேமிப்பு கணக்கு எண்.1358101017200 என தெரிவித்தார். மேலும் சேரங்கோடு ஊராட்சிக்கு பொதுமக்கள் செலுத்தும் வீட்டு வரி / சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, தொழில்களுக்கான உரிம கட்டணம், பிற

வரியில்லாத வருவாய் இனங்கள் மற்றும் பல்வகை இனங்கள் ஆகியவற்றை பெற்று அதற்கான இரசீது வழங்குவது எனது பணியாகும் என தெரிவித்தார். பின்னர் அவரை சோதனை செய்ய தன்னுடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து மடிப்புடன் கத்தையாக 500 ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்ததை எண்ணிப்பார்க்க அதில் ரூ.10,000/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க அவரிடம் விவரம் கேட்க, அவர் குழந்தைகளுக்கு பள்ளிக்கட்டணம் மற்றும் பேருந்து கட்டணம் செலுத்த வீட்டிலிருந்து எடுத்து வந்த பணம் என்று கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்த வகையில் இல்லாததால் அந்த பணத்தை காவல் துணை கண்காணிப்பாளர் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினார். திரு.K.R.சைபு என்பவருக்கு மேற்கே இருந்த இருக்கையில் தெற்கு நோக்கி அமர்ந்திருந்தவரை காவல் துணை கண்காணிப்பாளர் விசாரிக்க தனது பெயர் திரு.P.சஜித் என்றும், தான் சேரங்கோடு ஊராட்சி அலுவலகத்தில் 01.07.2009-ம் தேதி முதல் பணியில் இருந்து தற்போது ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் அரசு கணக்கில் வசூலான தொகை குறித்து காவல் துணை கண்காணிப்பாளர் கேட்க, திரு.சஜித் அவர்கள் கணினியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை என்ற இணையதளத்திலிருந்து 11.09.2024-ம் தேதியில் வசூல் ஆன விவரங்களை திரு.சைபு அவர்கள் மூலம் பிரிண்ட் எடுத்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் ஆஜர் படுத்தி இன்றைய தினம் ஊராட்சியில் ரொக்கமாக வசூலான தொகை ரூ.18,334/-, ஆன்லைனில் ரூ.1,155/- மற்றும் POS மூலம் ரூ.781/- என ஆக மொத்தம் ரூ.20,270/- வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேலும் தான் கடைசியாக 27.08.2024-ம் தேதி முதல் 04.09.2024-ம் தேதி வரை ஊராட்சியில் ரொக்கமாக வசூலான தொகை ரூ.2,03,950/-ஐ 05.09.2024-ம் தேதி பந்தலூர் இந்தியன் வங்கி கிளையில் இருசால் செய்துவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும் 05.09.2024-ம் தேதி முதல் 11.09.2024-ம் தேதி வரை வசூலான தொகைகளை வங்கி கணக்கில் செலுத்த வேண்டும் என தெரிவித்தார். அப்போது காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சஜித் அவர்களிடம் 05.09.2024-ம் தேதி முதல் 10.09.2024-ம் தேதி வரை வசூலான விவரங்கள் குறித்து கேட்க, அவர்

திரு.சைபு அவர்கள் மூலம் மேற்படி விவரங்களை கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்தார். அந்த விவரங்களை பார்த்தபோது 05.09.2024-ம் தேதி முதல் 07.09.2024-ம் தேதி வரை ரொக்கமாக ரூ.9,187/-, ஆன்லைன் மூலம் ரூ.3,212/- மற்றும் POS ரூ.77/- என மொத்தம் ரூ.12,476/- வசூல் செய்யப்பட்டதற்கான விவரங்கள் இருந்தது. 09.09.2024-ம் தேதி ரொக்கமாக ரூ.21,863/- மற்றும் POS ரூ.1,565/- என மொத்தம் ரூ.23,428/- வசூல் செய்யப்பட்டதற்கான விவரங்கள் இருந்தது. 10.09.2024-ம் தேதி ரொக்கமாக ரூ.32,529/-, ஆன்லைன் மூலம் ரூ.1,914/- மற்றும் POS ரூ.704/- என மொத்தம் ரூ.35,147/- வசூல் செய்யப்பட்டதற்கான விவரங்கள் இருந்தது. பின்னர் ஊராட்சியில் ரொக்கமாக வசூலான தொகை குறித்து கேட்க, அந்த பணம் தனது அறையில் உள்ள பீரோவில் வைத்திருப்பதாக கூறி எடுத்து வந்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 162 எண்ணிக்கைகளிலும், 200 ரூபாய் நோட்டுக்கள் 2 எண்ணிக்கைகளிலும், 100 ரூபாய் நோட்டுக்கள் 5 எண்ணிக்கைகளிலும், 10 ரூபாய் நோட்டு என்றும் 1 ரூபாய் நாணயங்கள் 3 என மொத்தம் ரூ.81,913/- இருந்தது. அதை 05.09.2024-ம் தேதி முதல் 07.09.2024-ம் தேதி வரை, 09.09.2024, 10.09.2024 மற்றும் 11.09.2024-ம் தேதி வரை பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்த விவரங்களுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்தது. மேற்படி பணம் 05.09.2024-ம் தேதியிலிருந்து 11.09.2024-ம் தேதி வங்கியில் இருசால் செய்யபடாதது குறித்து காவல் துணை கண்காணிப்பாளர் கேட்க, சேரங்கோடு VP 228966-க்கான பணத்தை இந்தியன் வங்கி பந்தலூர் கிளையில் செலுத்த வேண்டியிருப்பதாலும், வேலை பளு காரணமாகவும் வாரத்திற்கு ஒருமுறைதான் வசூல் செய்யப்படும் தொகை இருசால் செய்து வருவதாகவும் தெரிவித்தார். காவல் துணை கண்காணிப்பாளர் ஊராட்சி செயலாளர் திரு.சஜித் அவர்களிடம் அடுத்த வேலை தினத்தில் பணம் ரூ.81,913/-ஐ வங்கியில் இருசால் செய்ய அறிவுறுத்தி அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைத்தார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை என்ற இணையதளத்திலிருந்து திரு.சைபு என்பவர் மூலம் பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்த 05.09.2024-ம் தேதி முதல் 07.09.2024-ம் தேதி வரை 9 தாள்கள், 09.09.2024-ம் தேதி 9 தாள்கள், 10.09.2024-ம் தேதி 8 தாள்கள். மற்றும்

11.09.2024-ம் தேதி 9 தாள்கள் ஆகியவற்றில் அனைத்து தாள்களிலும் ஊராட்சி செயலாளர் திரு.சஜித், Computer Operator திரு.சைபு ஆகியோர்களிடம் கையொப்பம் பெற்று காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக அறையில் திரு.சஜித் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கையின் மேசை முழுவதும் சோதனையிடப்பட்டது. பின்னர் அவர் அருகில் இருந்த பீரோ முழுவதும் சோதனையிடப்பட்டது. அந்த ஐந்து அடுக்குகள் கொண்ட ஸ்டீல் பீரோவில் மூன்றாவது அடுக்கில் பணம் கட்டுகளாக இருந்தது. அந்த பணம் குறித்து ஊராட்சி செயலாளரிடம் கேட்க, அவர் Computer Operator திரு.சைபு என்பவர் மூலம் எடுத்து ஆஜர் செய்ததை எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் தலா 100 எண்ணிக்கைகளில் 6 கட்டுகள் (ரூ.3,00,000/-) மற்றும் கத்தையாக இருந்த 500 ரூபாய் நோட்டுக்கள் 39 எண்ணிக்கையில் (ரூ.19,500/-) 200 ரூபாய் நோட்டுக்கள் 11 எண்ணிக்கையில் (ரூ.2,200/-), 100 ரூபாய் நோட்டுக்கள் 35 எண்ணிக்கையில் (ரூ.3,500/-), 50 ரூபாய் நோட்டுக்கள் 2 எண்ணிக்கையில் (ரூ.100/-), 20 ரூபாய் நோட்டுக்கள் 5 எண்ணிக்கையில் (ரூ.100/-) ஆக மொத்தம் ரூ.3,25,400/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி ஊராட்சி செயலாளர் திரு.சஜித் அவர்களிடம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விளக்கம் கேட்க, திரு.சஜித் அவர்கள் ந.க.எண்.171/2024, நாள்:03.09.2024 தேதியிட்ட சேரங்கோடு ஊராட்சி அலுவலக டெண்டர் நோட்டீஸை (7 தாள்கள்) எடுத்து ஆஜர் செய்தார். அந்த டெண்டர் நோட்டீஸில் குறிப்பிடப்பட்ட 79 பணிகளுக்கான டெண்டர் நாளை 12.09.2024-ம் தேதி நடைபெற இருப்பதால் ஒப்பந்ததாரர்களுக்கு பணிகளை ஒதுக்கீடு செய்வதற்காக ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்ற பணம் என்றும் தெரிவித்தார். மேலும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அலுவலக டெபாசிட் பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டை பார்வையிட்டதில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூல் செய்த பணத்திற்குண்டான பதிவுகள் எதுவும் இல்லை. மேலும் 11.09.2024-ம் தேதி வசூல் செய்ததற்கான பதிவுகளை கணினியில் இருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை

இணையதளத்திலிருந்து வசூல் செய்யப்பட்ட விவரங்கள் அடங்கிய 11.09.2024-ம் தேதிய பிரதியுடன் ஒப்பிட்டு பார்த்தபோது, அதிலும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணம் பெற்றதற்காக இரசீதுகள் வழங்கப்பட்டதற்கான விவரங்கள் எதுவும் இல்லை. பணம் வைத்திருந்ததற்கான விளக்கத்தினை அவர் சரிவர கூறாததாலும், பணம் பெற்றதற்கான பதிவுகள் எதுவும் அலுவலக பதிவேடுகளில் இல்லாததாலும், டெண்டர் நோட்டீஸ் ந.க.எண்.171/2024, நாள்:03.09.2024 குறிப்பிட்டுள்ள நிபந்தனையின்படி ஒப்பந்ததாரர்களுக்கு ஷெடியூல் தொகை பெற்றுக்கொண்டு இரசீது வழங்கியதற்கான பதிவுகள் எதுவும் இல்லாததால் பணம் ரூ.3,25,400/- ஒப்பந்ததாரர்களுக்கு பணிகளை ஒதுக்கீடு செய்ய பெற்ற கையூட்டு பணமாக இருக்கக்கூடும் எனக்கருதி செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. ஊராட்சி செயலாளர் திரு.சஜித் அவர்களிடம் ஊராட்சி அலுவலக தன்பதிவேடு குறித்து கேட்க, தன்பதிவேடு பராமரிக்கப்படுவதில்லை என தெரிவித்தார். பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் படை வீரர் கொடி நாள் வசூல் இலக்கு 2023-2024 குறித்து கேட்க, சேரங்கோடு ஊராட்சிக்கு என தனியாக இலக்கு நிர்ணயிக்கப்பட வில்லையென்றும், அதற்கான இரசீது புத்தகம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். அலுவலக வருகைப்பதிவேடு குறித்து கேட்க, வருகைப்பதிவேடு பராமரிக்கப்படுவதில்லை என தெரிவித்தார். ஊராட்சி அலுவலக 2024-2025-ம் ஆண்டிற்கான ரொக்க பதிவேடு குறித்து கேட்க, உதகமண்டலம் ஊராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள் 06.09.2024-ம் தேதி சேரங்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கள ஆய்வு செய்ய வந்தவர், ஊராட்சியிலிருந்த ரொக்க பதிவேட்டினை ஆய்வுக்காக எடுத்து சென்றதாக தெரிவித்தார். நான் உதகமண்டலம் ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.சரவணன் அவர்களை கைப்பேசியில் தொடர்பு கொண்டு சேரங்கோடு ஊராட்சி ரொக்க பதிவேடு குறித்து கேட்டபோது, அப்பதிவேடு தனது அலுவலகத்தில் உள்ளதாக தெரிவித்தார். ஊராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் குறித்து திரு.சஜித் அவர்களிடம் கேட்க, அவர் பதிவேடுகள் ஒவ்வொன்றாக எடுத்து ஆஜர் செய்தார். 1) படிவம்-7 ஊராட்சி வரிகள் மற்றும் பல்வகை வரவு வசூல்

பதிவேடு 2024-2025 Volume 1-ஐ பார்வையிட்டதில் பக்கம் 74-ல் 05.09.2024-ம் தேதியன்று ரூ.2,03,950/- இந்தியன் வங்கி பந்தலூர் கிளையில் சேரங்கோடு VP 228966 வங்கி கணக்கு எண்.7388783169-ல் இருசால் செய்ததற்கான பதிவு உள்ளது. 2) Deposit Register 2024-2025 (15-வது நிதிக்குழு) பதிவேட்டை பார்வையிட்டதில் பக்கம் 66-ல் வரிசை எண்.325-ல் 30.03.2024-ம் தேதி திரு.செல்வம், போத்துகொல்லி என்பவர் ரூ.8,000/- செலுத்தியதற்கான பதிவுகள் உள்ளது. 3) Register of Contractors 2024-2025: பதிவேட்டை பார்வையிட்டதில் பக்கம் 9-ல் வரிசை எண்.65-ல் 29.08.2024-ம் தேதி திரு.V.J.மத்தேய் என்பவர் ரூ.2,000/- செலுத்தி புதுப்பித்ததற்கான பதிவுகள் உள்ளது. மேற்படி பதிவேடுகளை பார்வையிட்டதற்காக காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் நானும் சம்மந்தப்பட்ட பக்கங்களில் கையொப்பம் செய்து அவற்றின் ஒலி நகல்கள் எடுக்கப்பட்டு விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.சஜித் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு மேற்கே தெற்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவரிடம் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரிக்க, தனது பெயர் செல்வி.C.மௌனிகா என்றும், தான் 2024-ம் வருடம் மே மாதம் முதல் சேரங்கோடு ஊராட்சியில் தற்காலிக பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு மாத ஊதியமாக ரூ.5,000/- ஊராட்சி அலுவலகத்திலிருந்து கொடுப்பதாக தெரிவித்தார். தான் Cash Book, Office Collection Register, Contractor Register, Head wise Register ஆகியவற்றில் பதிவுகளை மேற்கொள்ளும் பணிகளை செய்துவருவதாகவும் தெரிவித்தார். காவல் உதவி ஆய்வாளர் திருமதி.P.சாதனபிரியா உதவியுடன் அவரை சோதனை செய்ய பர்ஸிலிருந்து பணம் ரூ.260/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க கை செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்த பணம் என்று கூறினார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.260/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையில் திரு.சஜித் அவர்களுக்கு எதிரே நின்றிருந்தவரை விசாரிக்க தனது பெயர் திரு.S.சுபாஷ் என்றும், கடந்த 2021-ம் வருடம் முதல் சேரங்கோடு

ஊராட்சியில் 5 முதல் 9 மற்றும் 15 ஆகிய வார்டுகளின் தற்காலிக Fitter ஆக பணிபுரிந்து வருவதாகவும், அதற்காக தனக்கு சேரங்கோடு ஊராட்சியில் மாத ஊதியமாக ரூ.15,000/- தருவதாகவும் தெரிவித்தார். மேலும் குடிநீர் குழாய் சம்மந்தமான ஒப்பந்ததாரராக இருப்பதாகவும், டெண்டர் நோட்டீஸ் வரிசை எண்.34 முதல் 38 வரையிலான பணிகளுக்காக EMD மற்றும் பட்டியல் தொகை பணம் ரூ.7,489/- செலுத்தியதாகவும், அதற்கா அதற்கான இரசீதுகள் எதுவும் ஊராட்சியில் வழங்கவில்லை எனவும் தெரிவித்தார். பின்னர் அவரை சோதனை செய்ய தன்னுடைய பேண்டின் முன்பக்க வலதுபுற பாக்கெட்டிலிருந்த பர்ஸில் மடிப்புடன் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.6,000/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி விளக்கம் கேட்க டெண்டருக்காக எடுத்து வந்ததாகவும், சரியான முகாந்திரம் கூறாததாலும், அந்த பணம் ரூ.6,000/- செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.S.சுபாஷ் என்பவருக்கு அருகில் நின்றிருந்தவரை விசாரிக்க, தனது பெயர் திரு.R.சிவகுமார் என்றும், கடந்த 2016-ம் வருடம் முதல் சேரங்கோடு ஊராட்சியில் 11 முதல் 14 வரை உள்ள வார்டுகளின் தற்காலிக Fitter ஆக பணிபுரிந்து வருவதாகவும், அதற்காக தனக்கு சேரங்கோடு ஊராட்சியில் மாத ஊதியமாக ரூ.15,000/- தருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தன்னுடைய சட்டையின் இடதுபுற மேல்பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.100/-ஐ எடுத்து ஆஜர் செய்து தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் ரூ.100/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அலுவலக அறைக்கு நேர் எதிரில் வடக்கு பார்த்தவாறு உள்ள ஊராட்சி செயலாளர் அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. சோதனையின்போது ஊராட்சி செயலாளரின் இருக்கைக்கு வலதுபுறம் ஸ்டீல் பீரோவின் அருகில் இருந்த Winsor என்று எழுதப்பட்ட கருப்பு நிற லெதர் பேக்கிலிருந்து பணம் மடிப்புடன் கத்தையாக இருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்க்க 500 ரூபாய் 8 எண்ணிக்கைகளிலும், 200 ரூபாய் 7 எண்ணிக்கைகளிலும் மொத்தம் ரூ.5,400/- இருந்தது. அந்த பணம் குறித்து காவல் துணை கண்காணிப்பாளர் விளக்கம் கேட்க ஊராட்சி செயலாளர் திரு.சஜித் அவர்கள் எந்தவித

முகாந்திரம் கூறாததால், அப்பணம் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பின்னர் சேரங்கோடு ஊராட்சி அலுவலகத்தின் பிரதான நுழைவாயிலின் வடக்குபக்கம் கிழக்கு பார்த்தவாறு இருந்த அறையில் கிழக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் இருந்த நபரிடம் விசாரிக்க தனது பெயர் திரு.C.அஜித் என்றும், தான் தற்காலிக பணியாளராக 1½ வருடங்களாக சேரங்கோடு ஊராட்சியில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் மாகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 1 முதல் 9 வரையுள்ள பதிவேடுகளை பராமரித்து வருவதாகவும், அதற்காக தனக்கு சேரங்கோடு ஊராட்சியில் மாதந்தோரும் ரூ.5,000/- வழங்குவதாக தெரிவித்தார். சேரங்கோடு ஊராட்சியில் உள்ள 15 வார்டுகளின் மேற்பார்வையாளர்கள் வாரத்தில் புதன்கிழமையன்று ஊராட்சி அலுவலகம் வந்து 100 நாள் வேலை திட்டத்தில் பணிபுரிந்த வேலையாட்களின் வருகை பட்டியலை ஒப்படைத்தும், அடுத்த வாரத்திற்கான பதிவு செய்யப்படாத வருகை பட்டியலை தன்னிடமிருந்து பெற்று செல்வார்கள் எனவும் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.140/-ஐ இருந்ததை எடுத்து ஆஜர் செய்து தன்னுடைய கை செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.140/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.C.அஜித் என்பவர் இருக்கைக்கு எதிரே நின்றிருந்தவரை விசாரிக்க தனது பெயர் திரு.K.சிவகுமார் என்றும், தன்னுடைய ஊர் கப்பாலா என்றும், தான் வார்டு.3 MGNREGS-ல் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனது வார்டின் 100 நாள் வேலை பணியாளர்களின் வருகை பட்டியலை ஒப்படைக்க வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தன்னுடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.4,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விளக்கம் கேட்க, பணம் ரூ.500/- தனது கை செலவிற்காக வைத்திருப்பதாகவும், மனநோயாளியான தனது அக்கா செல்வி.கீதா என்பவர் மாதந்தோறும் அரசிடமிருந்து கலைஞர் மகளிர் உரிமை தொகை ரூ.1,000/- பெற்று வருவதாகவும், 10.09.2024-ம் தேதி தனது அக்காவின் ATM கார்டிலிருந்து பணம் ரூ.4,000- எடுத்ததாக கூறி தனது

கைப்பேசியில் இருந்த குறுந்தகவலை காண்பித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இருந்ததால், அந்த பணம் ரூ.4,500/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அதே அறையில் திரு.K.சிவகுமார் என்பவர் அருகில் நின்றுக்கொண்டிருந்த இரு பெண்களில் ஒருவரை விசாரிக்க தனது பெயர் திருமதி.P.ராஜேஸ்வரி என்றும், தான் வார்டு எண்.9-ல் 100 நாள் வேலை திட்டத்தில் மேற்பார்வையாளராக இருப்பதாகவும், 100 நாள் வேலை திட்டத்தில் கடந்த வாரத்தின் வருகை பட்டியலை ஒப்படைக்க 11.09.2024-ம் தேதி ஊராட்சி அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். காவல் உதவி ஆய்வாளர் திருமதி.P.சாதனபிரியா உதவியுடன் அவரை சோதனை செய்ய பர்ஸிலிருந்து பணம் ரூ.100/-ஐ எடுத்து ஆஜர் செய்து கை செலவிற்காக எடுத்துவந்த பணம் என்று தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் இருந்ததால், அந்த பணம் ரூ.100/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பிறகு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் திருமதி.S.கோகிலாதேவி என்றும், தான் வார்டு எண்.2-ல் 100 நாள் வேலை திட்டத்தில் மேற்பார்வையாளராக இருப்பதாகவும், 100 நாள் வேலை திட்டத்தில் கடந்த வாரத்தின் வருகை பட்டியலை ஒப்படைக்க இன்று ஊராட்சி அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். காவல் உதவி ஆய்வாளர் திருமதி.P.சாதனபிரியா உதவியுடன் அவரை சோதனை செய்ய பர்ஸிலிருந்து பணம் ரூ.200/-ஐ எடுத்து ஆஜர் செய்து கை செலவிற்காக எடுத்துவந்த பணம் என்று தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் இருந்ததால், அந்த பணம் ரூ.200/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் முதல் தளத்தில் வடக்கு பார்த்தவாறு உள்ள மன்ற கூட்ட அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. நான் அந்த திடீர் சோதனையின் போது திரு.S.சுபாஷ், திரு.S.கோபாலகிருஷ்ணன், திரு.K.R.சைபு மற்றும் திரு.P.சஜித் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த திடீர் சோதனையானது 12.09.2024-ம் தேதி காலை 04.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,30,800/- மற்றும் பணம் ரூ.10,000/- சேரங்கோடு ஊராட்சி செயலாளர்

திரு.P.சஜித், தற்காலிக Computer Operator திரு.K.R.சைபு ஆகியோர்கள் ஒப்பந்ததாரர்களுக்கு பணிகளை ஒதுக்கீடு செய்ய கையூட்டு பெற்றதாக இருக்கக்கூடும் என்பதாலும், பணம் ரூ.9,000/- வார்டு உறுப்பினர் திரு.C.கோபாலகிருஷ்ணன் தனது வார்டு சம்மந்தமான பணியை நிறைவேற்றிக்கொள்ள ஊராட்சி அலுவலர்களுக்கு கையூட்டு கொடுக்க கொண்டு வந்திருக்கக்கூடும் என்பதாலும் மற்றும் பணம் ரூ.6,000/- ஒப்பந்ததாரர் திரு.S.சுபாஷ் என்பவர் தனக்கு பணியை ஒதுக்கீடு செய்ய ஊராட்சி அலுவலர்களுக்கு கையூட்டு கொடுக்க வந்திருக்கக்கூடும் எனக்கருதியும் மொத்தம் ரூ.3,55,800/-கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கையின்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,55,800/-ம், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.P.சஜித், திரு.K.R.சைபு, திரு.C.கோபாலகிருஷ்ணன், திரு.S.சுபாஷ் ஆகியோரின் வாக்குமூலங்கள் இத்துடன் இணைத்துள்ளேன். மேற்படி நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் H.பிரகாஷ், உதகமண்டலம், 12.09.2024. Submitted: I have received a complaint from Tr.H.Prakash, Husur Sarishtadar (General), Incharge District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris on 12.09.2024 at 10.00 hrs and registered a case in Nilgiris Vigilance and Anti-Corruption Cr.No.4/2024 u/s 7(A) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 ஒப்பம் அ.தி.ஜெய் குமார் 12.09.2024 Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,55,800/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

[signature] 12-09-2024
காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்பு
நீலகிரி.